1972 ஏப்ரல் 3]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முயல் தூங்கிவிடாமல் இருந்தால் நல்லது (சிரிப்பு).

Water for Alangulam Cement Factory

* 841 Q.—DR. H. V. HANDE : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether this Government have any proposal to utilise the Ayyanar Koil River Water (situated 8 miles west of Rajapalayam in Tirunelveli District) for Alangulam Cement Factory; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) ஐயனார் கோவில் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுக்கும் திட்டத்திற்கான செயற்குறிப்பு எதுவுமில்லை. வைப்பாறு நதியிலிருந்து தண்ணீர் எடுத்து ஆலங்குளம் சிமிட்டி ஆலைக்குப் பயன்படுத்த திட்டம் ஒன்று ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

Income for Tamil Nadu Public Sevice Commission

*842 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) the details of the total amount of income of the Tamil Nadu Public Service Commission, for the year 1971; and

(b) the details thereof (1) Gazetted and (2) Non Gazetted?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :

(அ) ரூ. 7,83,244-64 காசுகள் :

(இ) (1) அரசிதழ் பதிவு பெற்றவர்கள் மூலம்—ரூ. 17,151-65 காசுகள்.

(2) அரசிதழ் பதிவு பெறாதவர்கள் மூலம்—ரூ. 766.092.99 காசுகள்.

திரு. என். டென்னிஸ் : அங்கஹீனமானவர்களுக்கு அப்ளிமுற்ட கேஷன் பீஸ் எக்ஸெமப்ட் செய்யப்படுகிறதா? அப்படி இல்லை யெனில் அது எக்ஸெம்ப்ட் செய்யப்படுமா ? 5–3

[1972 ஏப்ரல் 3

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்போதிருக்கிற சலுகைகள் ஹரிஜனங்களுக்கும், பிற்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களுக்குந்தான் இருக்கிறது. அங்கஹீனர்கள் பற்றி விவரம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : தமிழ் நாடு பப்ளிக் சர்விஸ் கமிஷன் வெகு முக்கியமான ஒரு பணியை ஆற்றக்கூடிய ஒரு கமிஷனை இருப்பதன் காரணமாக மத்தியில் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஆண்டுதோறும் ரிப்போர்ட் சமர்ப்பிக்கிற மாதிரி இங்கும் இவர்கள் அப்படி ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிக்க ஏற்பாடு செய்யப்படுமா ? அப்படியானால் சபையில் விவாதிப்பதற்குக்கூட ஒரு வாய்ப்பிருக்கும். எனவே அம்மாதிரி ஒரு ரிப்போர்ட் சமர்ப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது மத்தியில் எவ்வாறு இருக்கிறது என்பதைப் பார்த்த பிறகுப் பிறகு முடிவு செய்ய வேண்டிய விஷயம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அட்மினிஸ்ட்ரேட்டீவ் ரிபார்ம்ஸ் கமிஷனில் இந்தப் பணியாளர் தேர்வாணைக் கழகத்தில் நான் அபிஷியல்சை நியமனம் செய்யலாம் என்று ஒரு பரிந்துரை இருக்கிறது. அந்த அடிப்படையில் நான்-அபிஷியல்ஸ் யாரையாவது இந்தத் தேர்வுக் கழகத்தில் நியமனம் செய்வதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசமிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கனவே இருந்த முறைதான் பின்பற்றப்பட்டு வருகின்றது. புதிதாக உத்தேசம் எதுவும் இப்போது இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : பப்ளிக் சர்விஸ் கமிஷனுக்கு ஏழு லட்சம் ரூபாய் அப்ளிகேஷன் மூலம் வருகிற வருமானமா அல்லது வேறு ஏதாவது வருமானத்திற்கு வழி இருக்கிறதா ? அங்கஹீனர்கள்பற்றி இப்போது விவரம் இல்லை என்று சொன்னாலும் இனிமேலாவது அவர்களுக்கு விதிவிலக்குக் கொடுக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அங்கஹீனர்கள்பற்றி எடுத்துச் சொல்லப்பட்ட கருத்துக்களை அரசு ஆலோசிக்கும்.

1972 ஏப்ரல் 3]

ஆனால் இந்த ஏழு லட்சம் ரூபாய் என்பது தேர்விற்கான அட்மிஷன் பீஸ் என்ற முறையில் வந்ததுதான். ஆனால் தேர்விற்காகும் செலவு 11 லட்சத்திற்கு மேலாகிறது.

திருப்பூரிலுள்ள காங்கயம் கால்நடை வளர்ச்சி கூட்டுறவு விற்பனைச் சங்கம்.

*843 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருப்பூர் காங்கயம் கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவு விற்பனைச் சங்கம் 1963, 1966 ஆண்டுகளில் முனைப்புத் திட்டத்தின்கீழ் வாங்கியுள்ள கடன், உதவித் தொகை எவ்வளவு?

(இ) மேற்படித் தொகையை என்ன என்ன காரணங்களுக்குப் பயன்படுத்தியுள்ளனர்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் :

(அ) 1963-ஆம் ஆண்டு கால்நடை முனைப்புத் திட்டத்தின் கீழ் திருப்பூரிலுள்ள காங்கயம் கால்நடை வளர்ச்சி கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு கடன், உதவித் தொகை ஒன்றும் கொடுக்கப்படவில்லை. 1966-ம் ஆண்டு இச்சங்கத்திற்கு ரூ. 1,90,000 கடனாகவும், ரூபாய் 30,000 உதவித் தொகையாகவும் கால்நடை முனைப்புத் திட்டத்தின்கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.

(இ) தீவனத் தயாரிப்புத் தொழிற்சாலைக்கான நிலம், இயந்திரங்கள், லாரி வாங்குவதற்கும், தொழிற்சாலை, அலுவலகம், கிடங்கு ஆகியவற்றுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கும் பணியாளர்களை நியமிப்பதற்கும் மேற்படித் தொகை பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மேற்படி சங்கத்திற்கு வழங்கப்பட்ட தொகையின் ஒரு பகுதியைக்கொண்டு சுழல் நிதி ஒன்று ஏற்படுத்தி அதன் மூலம் தயார் நிலையிலுள்ள கலவைத் தீவனத் தயாரிப்புக்கான தானிய வகையராக்கள் வாங்க வழி செய்யப்பட்டுள்ளது.